**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 110/2024**

Name : கார்த்திகேயன் Date : 06.12.2024

Father Name : நாகராஜன் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

குறுக்கு விசாரணை:-

நான் எனது புகார் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கோவில் கிளியனூரில் வசிப்பதாக கூறியுள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு 2020ஆம் ஆண்டு முதல் தெரியும். எதிரி அன்னவாசல் கிராமத்தை சேர்ந்தவர். எதிரியின் கணவர் பெயர் ஜெயசீலன் ஆகும். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரி சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார். மூங்கில் தோட்டம் மணல் பாஸ்கர், பொறியாளர் வினோத், பொறியாளர் விமல் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. பொறியாளர் விமல் என்பவரிடம் நான் தண்டல் வசூல் வேலையை நான் பார்த்து வந்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எதிரிக்கு நான் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிரி எனக்கு எந்த இடத்தில் வைத்து காசோலையை கொடுத்தார் என்ற விபரத்தையும், யார், யார் முன்னிலையில் வைத்து கொடுத்தார் என்ற விபரத்தையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி விமல் என்பவரிடம் ரூ.1,50,000/- கடன் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி விமல் என்பவரிடமிருந்து தான் ரூ.1,50,000/- கடன் பெற்று அந்த கடனிற்காக இந்த வழக்கு காசோலையை கொடுத்தார் என்றாலும், அந்த காசோலையை வைத்து நான் மோசடியாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்ற விபரத்தையும், எந்த இடத்தில் எதிரி காசோலையை என்னிடம் கொடுத்தார் என்ற விபரத்தினையும் என்னால் கூற இயலவில்லை என்றால் சரியல்ல.

எதிரிக்கு நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும். எதிரி எந்த காசோலையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும், விமலிடம் எதிரி கொடுத்த காசோலையை வைத்து நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றாலும், விமல் கொடுத்த எதிரி பற்றி விபரங்களின் அடிப்படையில் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**